Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 809/2023

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | சாந்தி |
| Husband's Name | : | ராதா கிருஷ்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 26.08.2025.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் புலியூர், செட்டிபாளையத்தில் குடியிருந்து இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜர் எதிரி எனது தம்பி ஆவார். எனக்கு எனது அம்மா அ.பு.ச.1668/3 ல் 2425 ச.அடி இடம் தான செட்டில்மெண்ட்டாக கொடுத்தார். 08.03.2006 கிரயப்பத்திரன்படியும் பாத்தியப்பட்ட சொத்தை எனக்கு ஆதரவாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது. அந்த இடத்தில் ஆஜர் எதிரியும், அவரது மனைவியும் பிரச்சனை செய்து வந்தனர். தீர்ப்பில் பிரச்சனை செய்யக்கூடாது என இருந்தும், எதிரி பாத்ரூமை பயன்படுத்தக்கூடாது என பிரச்சனை செய்து வந்தார். 05.05.2022 ம் தேதி காலை 05.00 மணியளவில் ஆஜர் எதிரி பாத்ரூம் டாய்லெட் செட்டை கடப்பாறையால் உடைத்தார். சத்தம் கேட்டு எனது கணவர் ராதா கிருஷ்ணன் சென்று ஆஜர் எதிரியிடம் கேட்டபோது, ஆஜர் எதிரி கடப்பாறையை

காண்பித்து அடித்து கொலை செய்துவிடுவதாக கூறினார். நான் ஆஜர் எதிரியிடம் எனக்கு தீர்ப்பாகி இருக்கும்போது ஏன் பிரச்சனை செய்கிறாய் என்று கேட்டதற்கு கடப்பாறையால் அடித்து கொலை செய்துவிடுவதாக மிரட்டினார். இது சம்மந்தமாக பசுபதிபாளையம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புலியூரிலுள்ள எனது தந்தை ராமசாமி பெயரிலிருந்த வீட்டை ஆஜர் எதிரி தனது பெயருக்கு வீட்டுவரி பெயர் மாற்றம் செய்துள்ளார். எனது கையொப்பத்தை போட்டு பெயர் மாற்றியுள்ளார். என்னிடம் காட்டப்படும் பீங்கான் துண்டுகளை நான் போலிசாரிடம் ஆஜர்படுத்தியது. **பீங்கான் துண்டுகள் அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கடப்பாறையால்தான் பாத்ரூம் பீங்கானை உடைக்கப் பயன்படுத்தியது. **கடப்பாறை அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 809/2023

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 2 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | ராதா கிருஷ்ணன் |
| Husband's Name | : | ராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 26.08.2025.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் புலியூர், செட்டிபாளையத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மைததுனர் ஆவார். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே பாத்ரூம் சம்மந்தமான பிரச்சனை. எனது மாமியார் சொத்தை எனது மனைவி தானசெட்டில்மெண்ட் மூலம் அளித்த சொத்தில்தான் பாத்ரூம் உள்ளது. ஆஜர் எதிரி அடிக்கடி சொத்து, பாத்ரூம் சம்மந்தமாக தனது சொத்து என்றும், அடிக்கடி பிரச்சனை செய்து வந்தார். எனது மனைவி நீதிமன்றத்தின் மூலம் சிவில் வழக்கு தொடுத்து தீர்ப்பு பெற்றிருந்தார். 05.05.2022 ம் தேதி காலை 05.00 மணியளவில் ஆஜர் எதிரி பாத்ரூம் டாய்லெட் செட்டை கடப்பாறையால் உடைத்தார். சத்தம் கேட்டு நான் சென்று ஆஜர் எதிரியிடம் கேட்டபோது, ஆஜர் எதிரி கடப்பாறையை காண்பித்து அடித்து கொலை

செய்துவிடுவதாக கூறினார். எனது மனைவி ஆஜர் எதிரியிடம் தீர்ப்பாகி இருக்கும்போது ஏன் பிரச்சனை செய்கிறாய் என்று கேட்டதற்கு கடப்பாறையால் எனது மனைவியையும் அடித்து கொலை செய்துவிடுவதாக மிரட்டினார். இது சம்மந்தமாக பசுபதிபாளையம் காவல் நிலையம் சென்று எனது மனைவி கொடுத்த புகாரின்பேரில் போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**